விழுப்புரம் மாவட்டம், கயத்தூர் கிராமத்தில் ரோந்துப் பணியின்போது உயிரிழந்த

# விக்கிரவாண்டி காவல் நிலைய தலைமைக் காவலரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.’ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, மார்ச் 17 -

விழுப்புரம் மாவட்டம், கயத்தூர் கிராமத்தில் பணியின் போது உயிரிழந்த தலைமைக் காவலர் சீனுவாசன் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்து முதல்வர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்துவந்த சீனுவாசன் (வயது 40) த/பெ.சந்திரன் என்பவர் நேற்று (16.3.2025) விடியற்காலை சக காவலர் மஞ்சுநாதன் என்பவருடன் தொரவி கிராமத்தில், விக்கிரவாண்டி - புதுச்சேரி மாநில நெடுஞ்சாலையில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த போது சந்தேகப்படும்படியாக இரு சக்கர வாகனத்தில் வந்த மூன்று நபர்களில் இரண்டு நபர்களை சக காவலருடன் மடக்கிப்பிடித்து விக்கிரவாண்டி காவல் நிலையத்தில் ஒப்படைத்துள்ளார்.

பின்னர் தப்பியோடிய மூன்றாவது நபரை பிடிப்பதற்காக கயத்தூர் கிராமத்தில் தேடிவந்து கயத்தூர் சுடுகாடு அருகே அந்த மூன்றாவது நபரை விரட்டிப் பிடிப்பதற்காக சென்றபோது எதிர்பாராதவிதமாக மயங்கி கீழே விழுந்த தலைமைக் காவலர் சீனுவாசனை சக காவலர் உடனடியாக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் தலைமைக் காவலர் சீனுவாசன் உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன்.

தலைமைக் காவலர் சீனுவாசன் அவர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய பணி எந்நாளும் நினைவுகூறத்தக்கது. அவரது உயிரிழப்பு தமிழ்நாடு காவல்துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

சீனுவாசன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்கள் மற்றும் அவருடன் பணிபுரிபவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு இருபத்தைந்து இலட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

# நெல்லை மண்ணின் இலக்கிய முகங்களில் ஒருவர்! எழுத்தாளர் நாறும்பூநாதன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



சென்னை, மார்ச்.17-

நெல்லை மண்ணின் இலக்கிய முகங்களில் ஒருவராக விளங்கிய எழுத்தாளர் நாறும்பூநாதன் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு :-

எழுத்தாளரும் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்கத்தின் மாநில நிர்வாகியுமான நாறும்பூநாதன் அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

நாறும்பூநாதன் அவர்கள் நெல்லை வட்டாரத்தை மையப்படுத்திய தனது இலக்கியப் படைப்புகளாலும், சமூகச் செயற்பாடுகளாலும் நன்கு அறியப்பட்ட முற்போக்கு இயக்க எழுத்தாளராக விளங்கியவர் ஆவார். நமது அரசு நடத்தும் பொருநை இலக்கியத் திருவிழாவிலும் அவர் மிக முக்கியப் பங்காற்றினார் என்பதை நன்றியோடு இவ்வேளையில் நினைவு கூர்கிறேன்.

நாறும்பூநாதன் அவர்களது இலக்கியப் பங்களிப்புகள், சமூகச் செயற்பாடுகள், பள்ளி மாணவர்களிடையே இலக்கிய ஆர்வத்தைத் தூண்டுவதற்கான அவரது முன்னெடுப்புகள் ஆகிய தமிழ்ப் பணிகளைப் பாராட்டி 2022ஆம் ஆண்டுக்கான உ.வே.சா. விருதினை நமது அரசின் சார்பில் வழங்கியிருந்தோம் என்பது குறிப்பிடத்தக்கது.

நெல்லை மண்ணின் இலக்கிய முகங்களில் ஒருவரான எழுத்தாளர் நாறும்பூநாதன் அவர்களை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கும், அரசியல் - இலக்கியத் துறை நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

# வடபழனி திருக்கோயிலில் 4 இணைகளுக்கு திருமணம்

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கினார்.

சென்னை, மார்ச் 17-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (16.03.2025) வடபழனி ஆண்டவர் திருக்கோயிலில் 4 இணைகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்து, சீரிவரிசைப் பொருட்களை வழங்கினார்.

பின்னர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பிறகு, திருக்கோயில்கள் சார்பில் ஏற்கனவே நடத்தப்பட்டு வந்த கட்டணமில்லா திருமணங்கள் நடத்துவதற்கான தடை உடைத்தெறிந்து, 2022 23 ஆம் நிதியாண்டு முதல் 2024 25 ஆம் நிதியாண்டு வரை மூன்று ஆண்டுகளில் முதலாம் ஆண்டு 500 இணைகள், இரண்டாம் ஆண்டு 600 இணைகள், மூன்றாம் ஆண்டு 700 இணைகளுக்கு கட்டணமில்லா திருமணம் நடத்தி வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டன. இன்று வடபழனியில் நடைபெற்ற 4 இணைகளுக்கான திருமணத்துடன் சேர்த்து இதுவரை திருக்கோயில்கள் சார்பில் 1,786 இணைகளுக்கு 4 கிராம் தங்கத் தாலியுடன் ரூ. 60 ஆயிரம் மதிப்பிலான சீர்வரிசைப் பொருட்களை திருமணங்களை நடத்தி வைத்துள்ளோம். திருமண இணைகளும், இரு வீட்டு குடும்பத்தாரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நீண்ட ஆயுளோடு நல்ல உடல் ஆரோக்கியத்தோடு வாழ வேண்டும் என்று மனதார வாழ்த்துவது எங்களை இதுபோன்ற பணிகளில் மேலும் உற்சாகத்துடன் பணியாற்றிட ஊக்கமளிக்கிறது.

இந்த அரசு பொறுப்பேற்ற பின், இந்து சமய அறநிலையத் துறை வரலாற்றில் இல்லாத அளவிற்கு 2,713 திருக்கோயில்களுக்கு இதுவரை குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. திருக்கோயில்களுக்கு சொந்தமான ரூ.7,197 கோடி மதிப்பிலான 7,436.70 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளதோடு, 1,83,167 ஏக்கர் திருக்கோயில் நிலங்கள் அளவீடு செய்யப்பட்டு 1,20,766 எல்லைக் கற்கள் பதிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த நில மீட்பு வேட்டை தொடரும். மேலும், மாநில வல்லுநர் குழுவால் 13,024 திருக்கோயில்களுக்கு திருப்பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக இதுவரை ரூ.5,602 கோடி மதிப்பீட்டிலான 24,252 திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் உபய தாரர்கள் மட்டும் ரூ.1,293 கோடி மதிப்பிலான திருப்பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். ஒளிவு மறைவற்ற வகையில், எந்தெந்த பணிகளுக்கு உபய தாரர்கள் நிதியளிக்கின்றார்களோ அதனை முறையாக பயன்படுத்துகின்ற ஆட்சியாக திராவிட மாடல் ஆட்சி திகழ்கிறது.

தினந்தோறும் பொய்யிலே பிறந்து, பொய்யிலே வளர்ந்த ஒரு மாநில கட்சிக்கு தலைவர் இருப்பாரென்றால், அவர் அண்ணாமலை ஒருவராகத் தான் இருக்க முடியும். காமாலை நோய் பிடித்தவருக்கு கண்டதெல்லாம் மஞ்சள் என்பது போல் எதை எடுத்தாலும் குறை சொல்லியே பழக்கப்பட்ட அண்ணாமலை நிதிநிலை அறிக்கை குறித்து நிறைவாக கூறுவார் என நாங்கள் எதிர்பார்க்கவில்லை. எங்களை வசை பாடியவர்களும் இன்றைக்கு வாழ்த்து சொல்கிற அளவிற்கு நிதிநிலை அறிக்கையை உலக அரங்கிலே தூக்கி பிடித்த, மதிநுட்பம் நிறைந்த அரசியல் தீர்க்கதரிசியாக முதலமைச்சர் அவர்கள் திகழ்கின்றார். நிதிநிலை அறிக்கையானது ஒன்றியம் கடந்து உலக நாடுகள் பாராட்டுகின்ற அளவிற்கு இருக்கின்ற போது மக்களுடைய ஆதரவைப் பெறாத அண்ணாமலை போன்றவர்களுக்கு பதில் சொல்லி நேரத்தை வீணடிக்க விரு ம்பவில்லை. வேளாண்மை நிதிநிலை அறிக்கையை உண்மையான விவசாய குடிமக்கள் வரவேற்றுக் கொண்டிருக்கின்றார்கள் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் ஜெ. கருணாநிதி எம்.எல்.ஏ., இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் டாக்டர் சி. பழனி, இணை ஆணையர்கள் ச.இலட்சுமணன், திருமதி கி.ரேணுகா தேவி, திருமதி ஜ.முல்லை, துணை ஆணையர் இரா.ஹரிஹரன், மாநகராட்சி உறுப்பினர் எம். பாஸ்கரன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! கே.சந்துரு தலைமை! மக்கள் முதல்வரின்

# மனிதநேய விழா! 3 புதிய ஆட்டோக்கள் - 300 பேருக்கு சீருடைகள்!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார்! கலாநிதி வீராசாமி எம்.பி. பங்கேற்பு!



சென்னை, மார்ச் 17 -

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் 25, களமொன்றும் புதியதில்லை!! கழகம் என்றும் தோற்பதில்லை!! எனும் தலைப்பில், ஆட்டோ ஓட்டுநர்களுக்கு நலத்திட்ட உதவிகள் 16.03.2025 வி.க.நகர், அம்ரீஸ் மஹாலில் நடைபெற்றது.

இப்புகழரங்கத்தில் கழக சட்டத்துறை துணை செயலாளர் கே.சந்துரு தலைமை வகிக்கிறார். மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான பி.கே.சேகர்பாபு முன்னிலை வகிக்கின்றார்.

மேயர் ஆர்.பிரியா ப.ரங்கநாதன், ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், சி.மகேஷ்குமார், சரிதா மகேஷ்குமார், டி.லோகேஷ், தேவஜவஹர், எஸ்.பன்னீர்செல்வம், எஸ். தனசேகர், துரைகண்ணன், ம.அசோக்குமார், ஆர்.எஸ். சித்திக், பி.பழனி, இள. இளங்கோவன், எம்.தாவுத்பீ, எஸ். கே.ரமேஷ், எல்.டி.தாமஸ், பா.அன்பரசு, கே.ஜார்ஜ்குமார், ந,பொன்முடி, டி.சந்திரசேகர், PTC.ரவி, கே.பி.ஆதவன்மணி. மாமன்ற உறுப்பினர்கள்: டி.யோ கபிரியா, பி.அமுதா, சி.ஸ்ரீதணி, கே.சாரதா வரவேற்புரை ஆற்றினர்..

இந்நலத்திட்ட விழாவில் 3 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு புதிய ஆட்டோவும் 300 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை மற்றும் நலத்திட்ட உதவிகளும் ரொக்கமாக ரூபாய் 1000 மும் அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்கள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

மேலும், இப்புகழரங்கத்தில் மேயர் பிரியாராஜன், டாக்டர்.கலாநிதிவீராசாமி எம்.பி, ப.ரங்கநாதன், இரா. விடுதலை, பி.அதிபதி, எம். ஜே.சி.பாபு, என். ராமச்சந்திரன் செ.முருகன், என் சௌந்தர், என். பவுல்ராஜ், எம்டி தமிழ்ச்செல்வன் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நலத்திட்ட விழாவில் பி.ஊமைதுரை நன்றி கூறினார்.

முதல்வர் பிறந்த நாள்: மீ.வே.கர்ணாகரன் தலைமையில்

# சோழவரம் தெற்கு ஒன்றியத்தில் கைப்பந்துப்போட்டி!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார் – கே.பி.சங்கர் எம்.எல்.எ. பங்கேற்பு!

சென்னை, மார்ச் 17-

சென்னை வடகிழக்கு மாவட்டம் சோழவரம் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் முதல்வர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் கைப்பந்து போட்டி நேற்று பாண்டியநல்லூர் மைதானத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு வழுதிகை நா.செல்வ சேகரன், ஏ.காசிம் முகம்மது, கே.எம்.துரைவேல், ப.சீனிவாசன், கி.வீரம்மாள், செ.அரசு, இரா.விஜயன், பா. சேகர், பொன்.கோதண்டன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இப்போட்டிக்கு சோழவரம் தெற்கு ஒன்றியக் கழக செயலாளரும் ஒன்றிய துணைப் பெருந்தலைவருமான மீ.வே. கர்ணாகரன் தலைமை தாங்கினார்.

மாவட்டக் கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு போட்டியை துவக்கி வைத்து பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

மேலும் இந்நிகழ்ச்சியில் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., மாதவரம் தொகுதி பொறுப்பாளர் டாக்டர் ஜெ.அருண், மாவட்ட நிர்வாகிகள் பா.மதிவாணன், வி.ராமநாதன், குறிஞ்சி எஸ்.கணேசன், மு. ராஜேந்திரன், டி.ராமகிரு ஷ்ணன், பி.அறிவழகி, எம்.ஆனந்தன், பொதுக்குழு உறுப்பினர்கள் என்.பரந்தாமன், ஜெ. ஜெய்மதன், டி.ஏ.ராஜி, இரா. முருகேசன், பி.சாந்தி, எஸ்.நந்தகோபால், புழல் எம்.நாராயணன், ஜி.துக்காராம், ஜி.தயாளன், சி.அற்புதராஜ், ஜி. ராஜேந்திரன், ஐ.ஜான், என். முகிலன், எஸ்.ஏ.சீனி வாசன், ஆர்.டி.மதன்குமார், எம்.எம். செந்தில், சன் முனியாண்டி, எம்.கோமலவள்ளி, எம். அம்மு, பி.வெங்கடேசன், து. கோபால், வீ.தியாகராஜன், ஜி.தேவநேசன், சுந்தர்ராஜ், தமிழ்மணி, ஆர்.டி.குமார், காஞ்சி சு.மதிவாணன், க.காசிநாதன், ரா.உதயராஜ், கே. ரவிக்குமார், ஜே.அப்துல் ஆசன், கே.லட்சுமி காந்தன், மோகனசுந்தரம், சி.கோவிந்தராஜ், சி.ஏழுமலை மற்றும் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், ஒன்றியக் குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், கழக முன்னாள் நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், சோழவரம் தெற்கு ஒன்றிய ஊராட்சி கிளைக் கழக செயலாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி ஏற்பாட்டினை சோழவரம் தெற்கு ஒன்றியக் கழக செயலாளர் மீ.வே.கர்ணாகரன் செய்திருந்தார்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் மீஞ்சூர் கிழக்கு வடக்கு ஒன்றிய திமுக சார்பில் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நாலூர் வன்னிப்பாக்கம், சிறுவாக்கம், தடபெம்பாக்கம், மெதூர், திருப்பாலைவனம், பழவேற்காடு ஆகிய ஊராட்சிகளில் மாவட்ட கழக பொறுப்பாளர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் பொதுமக்களுக்கு அறுசுவை உணவு மற்றும்நல உதவிகள் வழங்கி தண்ணீர் பந்தலை திறந்து வைத்தார். உடன் மு.பகலவன், ஜெ.மூர்த்தி, பாஸ்கர் சுந்தரம், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, மு.கதிரவன், கே.சுப்பிரமணியம், பா.செ.குணசேகரன், ஏ.வி.ராமமூர்த்தி, மு.முரளிதரன், மோகன்ராஜ் உள்பட பலர் உள்ளனர்



திருவள்ளூர் மேற்கு மாவட்ட விவசாய அணி தி.மு.க. சார்பில் அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட அமைப்பாளர் களம்பாக்கம் எம்.பன்னீர் செல்வம் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் மாநில விவசாய அணி துணை செயலாளர் ஆர்.டி.இ.ஆதிசேசன், ஒன்றிய செயலாளர் எஸ்.மகாலிங்கம் பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கினர் உடன் சி.ஜெயபாரதி, டி.மூர்த்தி, ஜி.ரமேஷ், நிலவதி சீனிவாசன், த.தினகரன், உள்பட நிர்வாகிகள் பலர் உள்ளனர்

## இந்திய ராணுவத்தில் ஆட்சேர்ப்பு!

சென்னை, மார்ச்.16–

இந்திய ராணுவத்தில் நடப்பாண்டுக்குரிய ஆட்சேர்ப்புக்கான அறிவிக்கை வெளியாகியுள்ளது. ராணுவத்தின் ஆட் சேர்ப்பு அலுவலக சென்னை தலைமையகம் சார்பில் இந்த அறிவிக்கை www.joinindia narmy.nic.in என்ற அதிகாரப்பூர்வ இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கடலூர், வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, சென்னை, திரு வள்ளூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்கள், புதுவை யூனியன் பிரதேசத்திலிருந்து புதுச்சேரி மாவட்டம் மற்றும் அந்தமான் & நிக்கோபார் தீவுகளின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள திருமணமாகாத ஆண்கள், பெண்கள் ஆகியோர், தங்கள் விண்ணப்பங்களை இந்த இணைய தளத்தின்மூலமாக ஆன்லைனில் சமர்ப்பிக்கலாம்.

அக்னிவீர் பொதுப் பணி, அக்னிவீர் தொழில்நுட்பம், அக்னிவீர் எழுத்தர்/ஸ்டோர்கீப்பர் தொழில்நுட்பம், அக்னிவீர் டிரேட்ஸ்மேன் (10 ஆம் வகுப்பு தேர்ச்சி), அக்னிவீர் டிரேட்ஸ்மேன் (8 ஆம் வகுப்பு தேர்ச்சி), சிப்பாய் நிலையிலான தொழில்நுட்ப நர்சிங் உதவியாளர், சிப்பாய் நிலையி லான பார்மா, அக்னிவீர் பொதுப் பணி (ராணுவ மகளிர் காவல்) ஆகிய பிரிவுகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

தேர்வர்கள், அக்னிவீர் பணியிடத்துக்கு தங்கள் தகுதியின் அடிப்படையில் ஒரேநேரத்தில் ஏதேனும் இரண்டு பிரிவு களுக்கு விண்ணப்பிக்கலாம். பொதுத்தகுதித்தேர்வு ஆன்லைன் முறையில் தமிழ் உட்பட 13 மொழிகளில் நடத்தப்படும். ஐடிஐ, டிப்ளமோ முடித்தவர்கள் மற்றும் என்சிசி தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு இதில் போனஸ் மதிப்பெண்கள் வழங்கப்படும்.

